peel District School Board

April 21, 2015

# குடும்பங்களுக்கு முக்கிய அறிவித்தல்:

## பீல் இடைநிலை (secondary) ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக May 4, 2015 முதல் மாணவர்கள் பாடசாலைகளுக்கு வர முடியாது

அவர்களுடைய உறுப்பினர்கள் — **இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் இடைநிலைத் தற்காலிக ஆசிரியர்கள் — May 4, 2015 முதல் வேலைநிறுத்தம் செய்வார்கள்** என ஒன்ராறியோ இடைநிலைப் பாடசாலைக் கூட்டமைப்பு (OSSTF) எங்களுக்கு அறிவித்துள்ளது. எங்களுடைய மாணவர்களின் பாதுகாப்பில் நாங்கள் அக்கறையாக உள்ளோம், அத்துடன் வேலைநிறுத்த நடவடிக்கைகளின் போது எங்களுடைய பாடசாலைகளின் நிலைப்பாட்டை நீங்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம்.

**இடைநிலை ஆசிரியர்களின் வேலைநிறுத்தத்தின் போது மாணவர்களின் பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்த முடியாது என்பதால், May 4, 2015 முதல் பீல் சபையின் இடைநிலைப் பாடசாலைகள் (வகுப்புக்கள் 9 - 12) அனைத்தையும் மூடுவதைத் தவிர வேறு வழி எங்களுக்கு இல்லை. வேலைநிறுத்தத்தின் போது தயவுசெய்து உங்களுடைய பதின்ம வயதினரைப் (teen) பாடசாலைக்கு அனுப்பாதீர்கள்.**

May 4 நிலவரப்படி:

- வகுப்புக்கள் 9 முதல் 12 வரையான மாணவர்களுக்கான வழமையான கற்பித்தல் திட்டங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்படுகின்றன.
- பாடநெறி சாராத (extracurricular) நடவடிக்கைகள், படித்தலுக்கான பயணங்கள் (field trips) மற்றும் பாடசாலை நிகழ்வுகள் ரத்து செய்யப்படுகின்றன.

- இடைநிலைப் பாடசாலை மாணவர்களுக்கான பேருந்துகள் எதுவும் இயங்க மாட்டா. ஆரம்பநிலை மாணவர்களுக்காக மட்டும் பேருந்துகள் தங்களின் பாதைகளைத் தொடரும்.
- பீல் இடைநிலைப் பாடசாலைகளுக்கு வெளியே ஆசிரியர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபடலாம். பீல் ஆரம்பநிலை பாடசாலைகளுக்கு வெளியே மறியல் போராட்டம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படவில்லை.

எங்களுடைய குடும்பங்கள் மற்றும் மாணவர்களுடைய கவலைகள் மற்றும் பதட்டத்தை நாங்கள் பகிர்ந்துகொள்கின்றோம், எனினும், இந்த நிலைமைக்குத் தீர்வு காண்பதற்கு மாகாணப் பேரம் பேசும் அமைப்புடன், ஒரு சபையாக, எம்மால் எதுவும் செய்ய முடியாது. நிலைமையையும் மாணவர்களில் அதன் பாதிப்பையும் தொடர்ந்து நாங்கள் கண்காணிப்பதுடன் நிலைமை மாற்றங்களை உங்களுக்கு தொடர்ந்து இற்றைப்படுத்திக் கொண்டிருப்போம். தொழிலாளர் நடவடிக்கையின் போது பாடசாலைகளின் நிலையைப் பார்ப்பதற்கு:

- **சமூக ஊடகங்களிலுள்ள** இற்றைப்படுத்தல்களைப் பாருங்கள் — Twitterல் @PeelSchoolsaஐப் பின்தொடருங்கள் மற்றும்/அல்லது Facebookல் www.facebook.com/peelschools என்ற எங்களுடைய பக்கத்தை like பண்ணுங்கள்.
- பீல் சபையின் வலைத்தளத்துக்கு **www.peelschools.org/labour**ல் வருகைதாருங்கள்

எங்களுடைய பணியாளர் குழுக்கள் அனைத்துடனும் நியாயமான, சமத்துவமான ஒப்பந்தங்களை உருவாக்குவதற்கு நாங்கள் தொடர்ந்தும் உறுதிபூண்டுள்ளோம். உங்களுடைய பொறுமை மற்றும் புரிந்துகொள்ளலுக்கு எப்போதும் போல், நாங்கள் நன்றியாக உள்ளோம்.



Janet McDougald

தலைவர், பீல் மாவட்டக் கல்விச் சபை